# அரசறிவியல்

## 2.4.5

## ஒப்பீட்டு அரசியல்



## ஒப்பீட்டு அரசியல் (Comparative Politics)

ஒப்பீட்டு அரசியல் என்பது “ஒவ்வொரு நாட்டினதும் அரசியல் செயல்கள், அரசியல் நடைமுறைகள், அரசியல் அதிகாரம் என்பன பற்றி பொதுமைப்படுத்தப்பட்ட முடிவுகளை எட்டுவது ஆகும்.”

***உதாரணம் :*** தேர்தல் முறைகள், வாக்காளர்களின் அரசியல் நடத்தைகளில் தாக்கம் செலுத்தும் விதத்தினை நாடுகளுக்கு இடையில் ஆய்வு செய்து பொதுமைப்படுத்தப்பட்ட முடிவுக்கு வர முடியும்.

- 1950 களின் பின்னர் அரசறிவியலோடு இணைந்த ஒரு புதிய பாடத்துறையே ஒப்பீட்டு அரசியலாகும். இது அமெரிக்க அரசறிவியலில் அறிமுகமாகி பின்னர் அரசறிவியலின் ஒரு புதிய “கற்றல் விதிமுறையாகவும்” பரவலடைந்துள்ளது.

- ஒப்பீட்டு அரசியல் கற்கை அரிஸ்டோட்டில் காலத்தில் ஆரம்பமாகி மக்கியால்வி ஈறாக வளர்ச்சியுற்று இன்று புதிய உருவினைப் பெற்றுள்ளது.

- ஐரோப்பா, அமெரிக்கா, சோவியத் ரஷ்யா, மூன்றாம் உலக நாடுகளில் அரசியலை புதிய அணுகுமுறைகளையும், புதிய ஆய்வுக்கருவிகளையும் பயன்படுத்தி பரிசோதனைகளையும், ஆய்வுகளையும் மேற்கொள்ளும் ஒரு கற்கைத் துறையே ஒப்பீட்டு அரசியலாகும்.

ஒப்பீட்டு அரசியலையும் அரசாங்க முறைகளையும் கற்பதற்கு அரசறிவியலாளர் ஆர்வம் காட்ட காரணம்

1. அரசியலை வேறு நாடுகளுடன் ஒப்பீட்டு கற்பதன் மூலம் எமது நாட்டின் அரசியலை பற்றி தெளிவாக புரிந்து கொள்ளக் கூடியதாக இருத்தல்.
2. பல நாடுகளின் அரசியலை சிறந்த முறையில் புரிந்து கொள்வதற்கு பல நாடுகளை ஒப்பீட்டுபட பார்த்தல் பயனுடையதாக அமைதல்.
3. நவீன அரசறிவியல் ஆய்வின் ஒருபணி அரசியல் பிரச்சினைகளையும் கருப்பொருள்களையும் பற்றி பொதுமைப்படுத்தப்பட்ட ஒரு முடிவுக்கு வரக்கூடியதாக இருத்தல்.

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk



Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

ஒப்பீட்டு ரீதியாக கற்கப்படும் விடயங்களாக

**1. நாடுகளுக்கிடையிலான ஒப்பீடுகள்**

உதாரணம் : அரசியல் கட்சிமுறை பற்றி சிலநாடுகளை அடிப்படையாக கொண்டு ஒப்பீட்டு ரீதியாக கற்க முடியும்

**2. நாட்டுக்குள்ளேயும் கருத்தியல்களை ஒப்பீடு செய்ய முடியும்.**

***உதாரணம் :*** தேர்தலில் பங்கேற்கும் ஆண்,பெண் மற்றும் கிராம மற்றும் நகர போக்குகளை ஒப்பீட்டு ரீதியாக கற்க முடியும்.

3. **அரசறிவியலில் முக்கியம் பெறும் கருப்பொருள்கள் சர்வதேசரீதியாக ஒப்பீட்டு ரீதியாகக் கற்கப்படுகின்றன.**

***உதாரணம்*** : ஜனநாயக ரீதியான மாற்றங்கள்

ஜனாதிபதி அரசாங்க முறைகளின் வெற்றி தோல்விகள்

பெண்களின் அரசியல் பங்கேற்பில் தென்படும் போக்குகள்



**வினாக்கள் :**

1. ஜனநாயக அரசியலில் ஒப்பீட்டு அரசியலில் வகிபங்கு.

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk



Copyright © www.e-thaksalawa.moe.gov.lk